# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

# Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

SOLT (U.K.)
211 KATHERINE ROAD, EAST HAM
LONDON E6 1BU
TEL 475 0356

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)


0396

கிழமை (11/87)

## தமிழீழத்தின் நாளாந்த நிகழ்வுகள்

6/3/87 நேற்றுக் காலை யாழ் குடாநாட்டில் புத்தூர் என்னும் ஊரில் உள்ள விக்னேஸ்வராக்கல்லூரி மீது சிறிலங்கா ராணுவக்கெலிகொப்டர் துப்பாக்கித் தாக்குதல் நடாத்தியதில் கல்லூரி மைதானத்தில் உடற்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவர்கள் காயம் அடைந்தனர். வீதியில் சென்றுகொண்டிருந்த பெண்மணி ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை ஐந்து மணியளவில் தொண்டமனாறு ராணுவ முகாமுக்கு அண்மையில் புதைத்து வைத்திருந்த நிலக்கண்ணி வெடியைப் பரிசோதித்துப் பார்க்கையில் அது எதிர்பாராத விதமாக வெடித்ததில் கமல், நிருபன் ஆகிய இரு இளம் வீரவேங்கைகள் வீரமரணம் அடைந்துள்ளனர் என்பதனை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகிறோம். இவ்விரு வீரவேங்கைகளுக்கும் வீரவணக்கத்தைச் செலுத்துகிறோம். றகீம், நிமால் ஆகியோர் காயம் அடைந்துள்ளனர்.

இன்று காலை யாழ் குடாநாட்டில் உள்ள பலாலி, நாவற்குழி ஆகிய முகாம்களில் இருந்து வெளியே புறப்பட முயன்ற ராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளின் கடுமையான மோதலுக்கு ஈடு கொடுக்க முடியாத ராணுவத்தினர் முகாம்களுக்குப் பின்வாங்கி ஓடினர். பின்னர் பலாலி ராணுவ முகாமில் இருந்து சரமாரியான பீரங்கித் தாக்குதல்களை மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்டனர். இதனால் ஐந்து பொதுமக்கள் காயத்திற்கு உள்ளானார்கள்.

7/3/87 யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு சிறிலங்கா அரசால் திட்டமிட்டிய நாசகாரத் சதித்திட்டம் அம்பலமாகியுள்ளது. தேசிய பாதுகாப்பு சபையில் கடந்தவாரம் விரிவாக ஆராயப்பட்ட இத்திட்டத்தில் பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற கொமாண்டோக்கள் கெலிகொப்டர் மூலம் இறக்கப்பட்டு பல்வேறு பாடசாலைகளைக் கைப்பற்றி மாணவ, மாணவிகளை பணயக் கைதிகளாக வைத்திருக்க, விமானங்கள் பாதுகாப்பு அளிக்க ஒன்பது ராணுவ முகாமில் இருந்து வெளியேறி ராணுவத்தினர் முன்னேறுவது என்றும் இந்த நடவடிக்கை ஐந்து நாட்களில் நடந்து முடிய வேண்டும் என்றும் தீர்மானம் ஆனது. தேசிய பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் வெளிநாட்டுக் கூலிப்படைகளும் கலந்து கொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தென்பகுதியில் இருந்து பாரிய கப்பல்களில் வந்த ஆயுதங்கள் காங்கேசன்துறைக்கு கொண்டு வரப்பட்டன.

திருகோணமலையில் அகதிகள் முகாமில் இருந்த பதினொரு பொதுமக்கள் ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் சாம்பல் தீவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இன்று காலை 8.30மணியளவில் வவுனியாவில் உள்ள கல்லரி ராணுவ முகாமில் இருந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக வெளியே வந்த ராணுவத் தொடர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்திய நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் இருபத்தியொரு ராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ராணுவத் தொடரில் ஒரு ஜீப் வண்டியும் ஒரு வானும் வந்தது குறிப்பிடத் தக்கது.

இன்று யாழ்ப்பாணப் பகுதியில் [illegible] குண்டு வீச்சுத் தாக்குதல் நடைபெற்றது. நல்லூர், சாவகச்சேரி, இயக்கச்சி, ஆனையிறவுப் பகுதிகளில் மக்கள் செறிந்த பகுதியில் இத்தாக்குதல் நடைபெற்றது. பல வீடுகள் தரைமட்டமானதுடன் பல பொதுமக்கள் காயமுற்றுமுள்ளனர்.

நேற்று* தமிழீழ விடுதலைப்புலிகள் சிறிலங்கா கெலிகொப்டர் மீது விமான எதிர்ப்பு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கெலிகொப்டர் கடுமையான சேதத்திற்கு உள்ளானது. அதில் பயணம் செய்த ராணுவத்தினர் காயமுற்றுள்ளனர்.

9/3/87 நேற்றிரவு யாழ்ப்பாணக் கோட்டை ராணுவ முகாமில் இருந்து சிறிலங்கா ராணுவத்தினர் பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி சரமாரியாக பீரங்கி மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் எட்டு இஸ்லாமிய மக்கள் உட்பட முப்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர். எழுபத்தி ஐந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயப்பட்டனர். ஐம்பதிற்கு மேற்பட்ட வீடுகள், கடைகள் கடும் சேதத்திற்கு உள்ளாகின. மிகவும் பாதிப்புக்குள்ளான இடம் யாழ்ப்பாணம் பொதுவைத்தியசாலை ஆகும். அத்துடன் யாழ்ப்பாணத்திற்கு ஆன மின் விநியோகம் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது பொதுமக்களை மேலும் வெகுவாகப் பாதித்துள்ளது. யாழ் வைத்தியசாலை நோக்கி வீசப்பட்ட குண்டுகளில் பதினைந்து வைத்தியசாலைக் கட்டிடத்திற்குள் [illegible] வெடித்தன. பெண்கள் நோயாளர் பகுதி, சிறுவர் பகுதி, மருந்துச்சாலை, டாக்டர் வசிப்பிடம் ஆகிய கட்டிடங்கள் கடுமையான சேதத்திற்கு உள்ளானது. இரண்டு தாதி

மார் பல நோயாளிகள் கொல்லப்பட்டனர். டாக்டர்கள் பலர் காயமடைந்தனர். அறுவை சிகிச்சைப் பகுதியில் ஒக்சிசன் சிலிண்டர்கள் வெடித்துத் தீப்பற்றின. மருந்துச்சாலை சேதமடைந்ததால் அத்தியாவசியமான மருந்துகள் அழிவுக்கு போயின.
இன்று நண்பகல் 12மணியளவில் நாவற்குளி ராணுவமுகாமில் இருந்து புறப்பட முயன்ற இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப்புலிகள் எதிர்கொண்டு தாக்கினர். எம்மவரின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத ராணுவத்தினர் முகாமிற்குள் முடங்கிக் கொண்டனர்.

9/3/87 நேற்றைய முன்தினம் யாழ்கோட்டையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலினால் பலபொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் வைத்தியசாலையில் கடமை புரிந்த பல ஊழியர்கள் பல நோயாளிகள் உட்பட நூற்றுக்கும் மேலான பொதுமக்கள் கை, கால் இழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வின்சர் தியேட்டர், ராஜா தியேட்டர் ஆகிய திரை அரங்குகளில் இருந்து வெளிவந்த பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர். பல கடைகளும், பொதுக்கட்டிடங்களும் பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளாகி எரிந்த வண்ணம் உள்ளன.
நேற்றுக் காலை நாவற்குளி ராணுவமுகாமில் இருந்து மக்கள் செறிந்த பகுதியில் நூற்றுக் கணக்கான குண்டுகள் வீசப்பட்டன. இதனால் ஏராளமான வீடுகள் சேதமாகின. பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் அயல் கிராமங்களுக்கு இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.
நேற்று வல்வெட்டித்துறை முகாமில் இருந்து வெளிவந்த ராணுவத்தினருடன் விடுதலைப்புலிகளின் அதிரடிப் படைப் பிரிவு மூர்க்கமான தாக்குதலைத் தொடுத்து ராணுவத்தினரை முகாமிற்குள் பின்வாங்கச் செய்தது. இதனைத் தொடர்ந்து மக்கள் வாழும் பகுதிகளுக்கு பீரங்கித் தாக்குதலை ராணுவம் மேற்கொண்டது. இதனால் பொதுமக்கள் பலர் காயமடைந்தனர். குழந்தைகளும் இத்தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

10/3/87 நேற்றுக் காலை முதல் மாலை வரை பலாலி, தொண்டமனாறு ஆகிய ராணுவமுகாம்களில் இருந்து ராணுவத்தினர் இடையிடையே பீரங்கிக் குண்டுகளை மக்கள் குடியிருப்புக்கள் மீது ஏவினர். இதனால் பல வீடுகள் சேதமடைந்ததுடன் பல பொதுமக்கள் காயமடைந்துமுள்ளனர்.
வடபகுதியில் இருந்து போன பதினைந்து லொறிகளை ஆகாயப்படையினர் ராணுவ முகாமில் தடுத்து வைத்துள்ளனர். சிறிலங்கா ஆகாயப்படையினர் அவ் லொறிகளின் சாரதிகளையும், உதவியாளர்களையும் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். நேற்று முன்தினம் அனுராதபுரத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றில் எரிபொருள் நிரப்புவதற்காகச் சென்ற போதே ஆகாயப் படையினர் அவர்களைக் கைது செய்தனர்.
யாழ்குடாநாட்டில் உள்ள நாவற்குளி ராணுவமுகாமில் இருந்து இன்று காலை 10மணி முதல் ராணுவத்தினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை கெலிகொப்டர் மூலம் மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடாத்தினர்.

11/3/87 நேற்றுக் காலை 11மணியளவில் யாழ் குடாநாட்டில் நீர்வேலி என்னும் இடத்தில் மூன்று கெலிகொப்டர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததோடு ஏவுகணைகளாலும் தாக்கின. இத் தாக்குதலினால் இரண்டு பெண்களும் இரண்டு மாணவர்களும் கொல்லப்பட்டனர்.

அன்புள்ள தமிழீழ மக்களே சிங்கள பேரினவாத அரசு சர்வதேச நாசகார சக்திகளின் துணையுடன் தமிழ் மக்களுக்கு எதிரான கொடிய அநாகரிக யுத்தத்தில் குதித்துள்ளது. தமிழ் இனத்தை பூண்டோடு அழிப்பது என கங்கணம் கட்டிக்கொண்டு இன ஒழிப்பு யுத்தத்தில் புகுந்துள்ள சிறிலங்கா இனவெறி அரசு மொசாட், C.I.A, S.A.S கூலிப்படையினர் மற்றும் பாகிஸ்தான், தென்னாபிரிக்க, சீன, இஸ்ரேல் போன்ற நாடுகள் பெருமளவு உதவி செய்து வருகின்றன. இந்த இன வெறியர்களால் தொடர்ந்தும் எம்மக்கள் கொல்லப்பட்டு வருகின்றார்கள். எம் சகோதரிகள் கற்பழிக்கப்பட்டும் உடமைகள் சூறையாடப்பட்டும் தமிழ் கலாச்சாரம் சீர் அழிக்கப்பட்டும் மொத்தத்தில் ஈழத்தில் எமது இனம் அழிந்து கொண்டு போகின்றது. இந்நிலையில் எமது மக்களையும் மண்ணையும் பாதுகாப்பதற்காக இதுவரை நானூற்றி ஐம்பதிற்கு மேற்பட்ட வீரர்களை அர்ப்பணித்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகளாகிய எமது விடுதலை இயக்கம் தொடர்ந்து உறுதியுடன் போராடி வருகின்றது. வீரம் விளைந்த எம்மண்ணில் ஏப்ப வெறிபிடித்த சிங்கள ஓநாய்களின் வெறியாட்டத்தை முடக்கி வைத்து இருக்கின்றோம். எமது மக்களுக்கும் மண்ணிற்கும் பாதுகாப்பு அரணாக இருந்து எமது இயக்கம் போராடி வருகின்றது என்பது உலகு அறிந்த உண்மை. இந் நேரத்தில் பெருமளவு ராணுவ படைகளையும் அதற்கு துணையாக விமானப்படை, கடற்படைகளையும் பெருக்கி யாழ்குடாநாட்டை சின்னாபின்னமாக்குவதே இனவெறி அரசின் திட்டமாகும். இத்திட்டத்தை முறியடிக்க அவ் அரசின் இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட கூலிப்படைகளுடன் மோதுவதற்கு எமக்கு ஏராளமான ஆயுதங்கள் தேவை. அத்துடன் சிங்கள அரசின் முதுகெலும்பான விமானப்படையை முறியடிக்க நல்ல ஏவுகணைகள் வேண்ட வேண்டியுள்ளது. இவற்றுக்கெல்லாம் பெரும் தொகையான நிதி தேவை. எனவே பொருளாதாரத் தடையினாலும் ராணுவ முற்றுகையினாலும் பெரிதும் துன்பப்பட்டு கொண்டு இருக்கும் ஈழ தமிழ் இனம் அழிந்து போகாவண்ணம் பாதுகாக்க வீரம் செறிந்த தியாகத்துடன் போராடும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அவசரகால யுத்த நிதிக்கு தாராளமாக உதவி செய்யுமாறு கேட்டு கொள்கின்றோம். உங்கள் தாய், தந்தை, சகோதர, சகோதரிகளை இவ் இன அழிவில் இருந்து பாதுகாக்க உதவி செய்வது ஒவ்வொரு தமிழனின் வரலாற்றுக் கடமையாகும்.

# "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"